பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4
25 05 2024 6 45
சனிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

- மக்களவைக்கு 6வது கட்டமாக இன்று 58 தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது.
- மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை வாக்குச்சாவடி வாரியாக வெளியட தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனு மீது உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.
- தமிழகத்தில் நடப்பாண்டில் மட்டும் மூளைச்சாவு அடைந்த 109 பேரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு 642 நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.
- சென்னையில் இருந்து இன்று பல்வேறு ஊர்களுக்கு 535 சிறப்பு பேருந்துகளை விரைவுப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.
- ஐபிஎல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

--- இனி விரிவான செய்திகள்---

<<<<>>>>

மக்களவைக்கு 6வது கட்ட தேர்தல் இன்று நடைபெற உள்ளது.

6 மாநிலங்கள் 2 யூனியன்பிரதேசங்களுக்கு உட்பட்ட 58 தொகுதிகளில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்குகிறது.

ஜார்கண்ட் மாநிலத்தின் 4 மக்களவைத் தொகுதியில் மாலை 5 மணி வரை மட்டுமே வாக்குப்பதிவு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த 6ஆம் கட்ட வாக்குப்பதிவில் தலைநகர் தில்லியில் உள்ள 7 மக்களவைத் தொகுதியிலும், உத்தரப்பிரதேசத்தில் 14, மேற்குவங்கம் மற்றும் பீகாரில் தலா 8, ஹரியானாவில் 10, ஒடிசாவில் 6, ஜம்மு-கஷ்மீரில் ஒன்று என 58 தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கான விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பிஜேபி மூத்த தலைவர்கள் திரு. தர்மேந்திர பிரதான், திருமதி மேனகா காந்தி, ஹரியானா முன்னாள் முதலமைச்சர் திரு. மனோகர்லால் கட்டார், பிஜேபி செய்தித்தொடர்பாளர் திரு. சம்பித் பத்ரா, மறைந்த முன்னாள் மத்திய அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் மகள் பன்சூரி ஸ்வராஜ்...

முன்னாள் கிரிக்கெட் வீரர் திரு. மனோஜ் திவாரி, காங்கிரஸ் மூத்த தலைவர்களான திரு. தீபேந்தர்சிங் ஹூடா, திரு. ராஜ் பாபர், முன்னாள் மத்திய அமைச்சர் குமாரி செல்ஜா, திரு. கண்ணையாகுமார், சமாஜ்வாதி கட்சியின் திரு. தர்மேந்திர யாதவ், மக்கள் ஜனநாயக கட்சியின் தலைவர் திருமதி மெஹபூபா முஃப்தி ஆகியோர் இன்று வாக்குப்பதிவு நடைபெறும் தொகுதிகளில் போட்டியிடும் முக்கிய வேட்பாளர்கள் ஆவர்.

இன்றைய வாக்குப்பதிவுக்காக 11 லட்சத்து 4 ஆயிரம் ஊழியர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

11 கோடியே 13 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக ஒரு லட்சத்து 14 ஆயிரம் வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன.

தேர்தலை அமைதியாகவும், நேர்மையாகவும் நடத்தி முடிக்க தேர்தல் ஆணையம் விரிவான பாதுகாப்பு ஏற்பாடுகளையும் செய்துள்ளது.

இந்நிலையில் மக்களவைக்கு 7வது மற்றும் கடைசி கட்ட வாக்குப்பதிவு நடைபெற உள்ள 7 மாநிலங்கள், ஒரு யூனியன்பிரதேசத்திற்கு உட்பட்ட 57 தொகுதிகளில் பிரச்சாரம் இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளது.

இந்தத் தொகுதிகளில் வாக்குப்பதிவுக்கு இன்னும் ஒரு வாரமே உள்ள நிலையில் தேசிய மற்றும் மாநில கட்சிகளின் தலைவர்கள் வாக்காளர்களை சந்தித்து தங்களது கட்சியின் வேட்பாளர்களுக்கு ஆதரவு திரட்டி வருகின்றனர்.

<<<<>>>>

மக்களவைத் தேர்தலில் பதிவான வாக்குகளை வாக்குச்சாவடி வாரியாக வெளியட தேர்தல் ஆணையத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரி, தாக்கல் செய்யப்பட்ட மனு மீது உத்தரவு பிறப்பிக்க உச்சநீதிமன்றம் மறுத்துவிட்டது.

நீதிபதி தீபங்கர் தத்தா, நீதிபதி சதீஷ் சந்திர ஷர்மா ஆகியோர் அடங்கிய விடுமுறைக் கால அமர்வு, இந்த மனு மீதான விசாரணையை ஒத்தி வைத்ததோடு, மக்களவைத் தேர்தல் முடிந்த பிறகு விசாரிக்கப்படும் என்று கூறியது.

தேர்தல் அமைதியாகவும், நேர்மையாகவும் நடைபெற வேண்டும் என்று அனைவரும் விரும்புகிறார்கள் என்றும், அதே நேரத்தில் விஷமிகள் எந்த ஆதாயமும் இதனால் பெற்றுவிடக் கூடாது என்பதிலும் கவனமாக இருக்க வேண்டும் என்று அந்த அமர்வு தெரிவித்தது.

<<<<>>>>

தமிழகத்தில் 6 புதிய அரசு மருத்துவக் கல்லூரிகளை அமைப்பதற்கான இடங்களைத் தேர்வு செய்வது உள்ளிட்ட பணிகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர்களுக்கு தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.

மாநிலத்தில் கடந்த ஆண்டு புதிதாக 11 அரசு மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டன.

இதையடுத்து மாநிலத்தில் உள்ள மொத்த அரசு மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கை 36ஆக அதிகரித்தது.

இந்நிலையில் இதுவரை மருத்துவக் கல்லூரிகள் இல்லாத காஞ்சிபுரம், ராணிப்பேட்டை, திருப்பத்தூர், பெரம்பலூர், மயிலாடுதுறை, தென்காசி ஆகிய 6 மாவட்டங்களில் தலா ஒரு அரசு மருத்துவக் கல்லூரியை தொடங்க வேண்டும் என்று மத்திய அரசிடம் தமிழக அரசு வலியுறுத்தி வந்தது.

முதற்கட்டமாக இந்த மருத்துவக் கல்லூரிகளுக்கான இடங்களை தேர்வு செய்யும் பணிகளை விரைந்து முடிக்க மாநில அரசு திட்டமிட்டுள்ளது.

இதன் பின்னர் தேசிய மருத்துவ ஆணையத்திடம் விண்ணப்பிக்கப்படும் என்று மாநில அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

தமிழகத்தில் நடப்பாண்டில் மட்டும் மூளைச்சாவு அடைந்த 109 பேரின் உடல் உறுப்புகள் தானமாக பெறப்பட்டு 642 நபர்களுக்கு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இதில் முதலிடத்தில் சென்னையில் உள்ள ராஜீவ்காந்தி அரசு பொது மருத்துவமனை உள்ளது என்று மாநில உறுப்பு மாற்று ஆணையத்தின் உறுப்பினர் செயலரான மருத்துவர் என். கோபாலகிருஷ்ணன் தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு, உடல் உறுப்பு தானத்திலும், உறுப்புகளை பிறருக்கு பொருத்துவதிலும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது என்றார்.

உடல் உறுப்புகளை தானம் செய்பவர்களின் உடலுக்கு அரசு சார்பில் மரியாதை செலுத்தப்படும் என்று கடந்த ஆண்டு மாநில அரசு அறிவித்த பின்னர் உடல் உறுப்பு தானம் செய்வோர் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக அவர் கூறினார்.

கடந்த ஆண்டு 128 பேர் உறுப்பு தானம் அளித்ததாகவும், அதன் மூலம் ஆயிரம் பேர் அரசு மற்றும் தனியார் மருத்துவக் கல்லூரிகளில் மறுவாழ்வு பெற்றதாகவும் அவர் கூறினார்.

<<<<>>>>

வார இறுதி நாட்களை முன்னிட்டும், நாளை முகூர்த்த நாள் என்பதாலும் தமிழகத்தில் இன்று சென்னையில் இருந்து பல்வேறு ஊர்களுக்கு 535 சிறப்பு பேருந்துகளை விரைவுப் போக்குவரத்துக் கழகம் இயக்கி வருகிறது.

நாளை 595 சிறப்புப் பேருந்துகள் இயக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கிளாம்பாக்கம் பேருந்து நிலையத்தில் இருந்து திருவண்ணாமலை, திருச்சி, கும்பகோணம், மதுரை, திருநெல்வேலி, நாகர்கோவில், கன்னியாகுமரி, தூத்துக்குடி, கோவை உள்ளிட்ட பல்வேறு ஊர்களுக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டு வருகின்றன.

சென்னை கோயம்பேட்டில் இருந்து நாகை, வேளாங்கன்னி, ஓசூர், பெங்களூரு ஆகிய இடங்களுக்கு இன்று 65 சிறப்புப் பேருந்துகளும், பெங்களூரு, திருப்பூர், ஈரோடு மற்றும் கோவை ஆகிய ஊர்களில் இருந்து பல்வேறு இடங்களுக்கு 200 சிறப்பு பேருந்துகளும் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்த சிறப்பு பேருந்துகளில் இன்று பயணிக்க 9 ஆயிரம் பயணிகளும், நாளை பயணிக்க சுமார் 14 ஆயிரம் பயணிகளும் முன்பதிவு செய்துள்ளனர்.

<<<<>>>>

வங்கக் கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் புயலாக மாறியுள்ளது.

தற்போது மத்திய கிழக்கு வங்கக் கடல் பகுதியில் நிலவும் இந்தப் புயல், தொடர்ந்து வடக்கு திசையில் நகர்ந்து தீவிரப் புயலாக இன்றிரவு வலுப்பெற்று நாளை நள்ளிரவு மேற்குவங்கம் - பங்களாதேஷ் இடையே கரையைக் கடக்கக் கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதன் காரணமாக அடுத்த 3 நாட்களுக்கு குமரிக் கடல் பகுதி, மன்னார் வளைகுடா மற்றும் அதனையொட்டிய தென்தமிழக கடலோரப் பகுதி, மத்திய கிழக்கு மற்றும் அதனை ஒட்டியுள்ள வடக்கு வங்கக் கடல் பகுதிகளில் சூறாவளிக் காற்று வீசக்கூடும் என்பதால் அந்தப் பகுதிகளில் மீன்பிடிக்க செல்ல வேண்டாம் என்று மீனவர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே தெற்கு கேரளா மற்றும் அதனை ஒட்டியுள்ள பகுதியில் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவுகிறது.

இதன் காரணமாக தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் இன்று லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொறுத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும் என்றும், அதிகபட்ச வெப்பநிலை 38 டிகிரி செல்சியசை ஒட்டியும், குறைந்தபட் வெப்பநிலை 28 டிகிரி செல்சியசை ஒட்டியும் இருக்கக் கூடும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தென்மேற்கு பருவமழையை எதிர்கொள்ள மேற்கொள்ள வேண்டிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பாக சேலம் மாவட்ட ஆட்சியர் டாக்டர் பிருந்தா தேவி அதிகாரிகளுடன் நேற்று ஆலோசனை நடத்தினார்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், பொதுமக்கள் மழை உள்ளிட்ட பேரிடர் தொடர்பான தகவல்களை ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணி நேரமும் இயங்கும் 1 0 7 7 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண்ணில் தெரிவிக்கலாம் என்று கூறினார்.

பருவமழையால் சேலம் மாவட்டத்தில் பாதிக்கப்படக்கூடிய சேலம், ஆத்தூர், மேட்டூர், எடப்பாடி, சங்ககிரி, வாழப்பாடி ஆகிய வட்டங்களில் உள்ள 23 பகுதிகளுக்கும் கண்காணிப்பு அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

<<<<>>>>

*இருவரிச் செய்திகள்*

ரஷ்யாவில் உள்ள அமெரிக்காவுக்குச் சொந்தமான சொத்துக்களை முடக்குவதற்கு அந்நாட்டு அதிபர் திரு. விளாடிமிர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

<<<<>>>>

யுக்ரைனின் வடகிழக்கு நகரமான **Kharkiv**-வில் நடத்தப்பட்ட ஏவுகணை தாக்குதலில் 7 பேர் உயிரிழந்தனர். 21 பேர் காயமடைந்தனர்.

<<<<>>>>

**Cannes** திரைப்பட விழாவில் இந்திய திரைப்படம் மற்றும் தொலைக்காட்சி நிலைய மாணவர் திரு. **Chidanand Nayak** மற்றும் அவரது குழுவினர் தயாரித்த **'Sun flowers where the first ones to know'** என்ற திரைப்படம் விருதுக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

பப்புவா நியுகினியாவில் ஏற்பட்ட நிலச்சரிவில் உயிரிழந்தோர் எண்ணிக்கை நூறாக அதிகரித்துள்ளது.

<<<<>>>>

கோடை விடுமுறை என்பதால் திருப்பதி திருமலை கோவிலுக்கு பக்தர்கள் அதிக அளவில் வருகை தருவதால் அடுத்த மாதம் 30ஆம் தேதி வரை வி.ஐ.பி. தரிசனம் ரத்து செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

தருமபுரி மாவட்டத்தில் 10ஆம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் நூறு சதவீதம் தேர்ச்சி பெற்ற அரசுப் பள்ளிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் திருமதி சாந்தி நேற்று வழங்கினார்.

<<<<>>>>

திருப்பூர் மாவட்டம் வெங்கலப்பாளையம் பகுதியில் நொய்யல் ஆற்றில் தண்ணீர் கரைபுரண்டு ஓடுவதால் ஆற்றைக் கடப்பதற்கு பொதுமக்கள் பரிசல் பயணம் மேற்கொண்டு வருகின்றனர்.

<<<<>>>>

*விளையாட்டுச் செய்திகள்*

ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டியில் ஹைதராபாத் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது.

சென்னையில் நேற்று நடைபெற்ற 2வது தகுதிப் போட்டியில் அந்த அணி 36 ரன் வித்தியாசத்தல் ராஜஸ்தான் அணியை வென்றது.

முதலில் விளையாடிய ஹைதராபாத் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்புக்கு 175 ரன் எடுத்தது.

176 ரன் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் பின்னர் விளையாடிய ராஜஸ்தான் அணி, 20 ஓவரில் 7 விக்கெட் இழப்புக்கு 136 ரன் மட்டுமே எடுத்தது.

சென்னையில் நாளை நடைபெற உள்ள இறுதிப் போட்டியில் ஹைதராபாத் அணி, கொல்கத்தா அணியை எதிர்கொள்ள உள்ளது.

<<<<>>>>

**Lyon** ஓபன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் பிரிவு இறுதி ஆட்டத்தில் இன்று இந்தியாவின் யூகி பாம்ரி – பிரான்சின் **Albano Olivetti** இணை, ஃபின்லாந்தின் **Harri Heliovaara –** பிரிட்டனின் **Henry Patten** இணையை எதிர்கொள்கிறது.

**<<<<>>>>**